ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2185/61 - 2020 ජූලි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.07.23
2185/61 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III – காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: பிசெசூ/காணி/03/எடு/26
காணி அமைச்சு குறிப்பு இல. : 4-3/6/2018/எச்டபிள்யூ/100

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 112, பத்தேவெவ கிராம அலுவலர் பிரிவிலுள்ள, விஹாரகல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதி சார்பாக அம்பாந்தோட்டை மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப் பட்ட 20.06.2019 ஆந் திகதிய வரைபட இல. இ.கி.வ. 4 மற்றும் பிற்சேர்க்கை இல. 325 மற்றும் தாள் இல. 720 இல் துண்டு இல. ஈ 4598 மற்றும் ஈ 4599 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.1730 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய இரண்டு (02) காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:-

*01.* **துண்டு இல.: ஈ 4598**

காணியின் பெயர்: துனேயாய; விபரம் : தோட்டம், கலப்புப் பயிர்ச் செய்கை காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: பத்தபடி பத்திரணகே திலகரத்ன, விஹாரகல, சூரியவெவ (காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அனுமதி இல. எச்/யூவி/சூ/பேர்/1044 (வரி). இ.கி.வ. 4 இல் துண்டு இல. டி 9710, (காணி எடுத்தல் ஏற்பாடு பூர்த்தி) ; விஸ்தீரணம்: 0.0457 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. ஈ 4599**

காணியின் பெயர் : துனேயாய ; விபரம் : நெல் வயல் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர்: இலங்கை மஹாவெலி அதிகாரசபை (பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர் : பஹலகே உபுல் தம்மிகா), காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அனுமதி இல. ஏச்/யூவி/சூ/ஏ/7791. இ.கி.வ. 4 இல் துண்டு இல. டி 9746, (காணி எடுத்தல் ஏற்பாடு பூர்த்தி) ; விஸ்தீரணம்: 0.0457 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சூரியவெவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

திலும் தயாரத்ன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
சூரியவெவ.

பிரதேச செயலகம்,
சூரியவெவ.
2020, யூலை 17.

08 – 109